

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

3-ஆம் திருமொழி - சீலைக்குதம்பை

* சீலைக்குதம்பைஒருகாதுஒருகாது செந்நிற ! மேல்தோன்றிப்பூ *
கோலப்பணைக்கச்சும்கூறையுடையும் குளிர்முத்திகோடாலமும் *
காலிப்பின்னேவருகின்ற கடல்வண்ணன்வேடத்தைவந்துகாணீர் *
ஞாலத்துப்புத்திரனைப்பெற்றார் நங்கைமீர்! நானேமற்றாருமில்லை. (1)

கன்னிநன்மாமதிள்சூழ்தரு பூம்பொழில்காவிரித்தென்னரங்கம் *
மன்னியசீர்மதுசூதனா! கேசவா! பாவியேன்வழ்வுகந்து *
உன்னைஇளங்கன்றுமேய்க்கச் சிறுகாலேயூட்டிஒருப்படுத்தேன் *
என்னின்மனம்வலியாள்ஒருபெண்இல்லை என்குட்டனே! # முத்தம்தா. (2)

காடுகளுடுபோய்க் கன்றுகள்மேய்த்துமறியோடி * கார்க்கோடல்பூச்
சூடிவருகின்றதாமோதரா! கற்றுத்தூளிகாண்உன்னுடம்பு *
பேடைமயிற்சாயல்பின்னைமணாளா! நீராட்டமைத்துவைத்தேன் *
ஆடிஅமுதுசெய்அப்பனுமுண்டிலன் உன்னோடுஉடனேஉண்பான் (3)

க்டியார்பொழிலணிவேங்கடவா! கரும்போரேறே * நீயுகக்கும்
குடையும்செருப்பும்குழலும்தருவிக்கக் கொள்ளாதேபோனாய்மாலே! *
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போன் சிறுக்குட்டச்செங்கமல
அடியும்வெதும்பி * உன்கண்கள்சிவந்தாய் அசைந்திட்டாய்நீஎம்பிரான்! (4)

பற்றார்நடுங்கமுன்பாஞ்சசன்னியத்தை வாய்வைத்தபோரேறே! * என்
சிற்றாயர்சிங்கமே! சீதைமணாளா! சிறுக்குட்டச்செங்கண்மாலே! *
சிற்றாடையும்சிறுப்பத்திரமும் இவைகட்டிலின்மேல்வைத்துப்போய் *
கற்றாயரோடுநீகன்றுகள்மேய்த்துக் கலந்துடன்வந்தாய்போலும். (5)

அஞ்சுடராழிஉன்கையகத்தேந்தும் அழகா! நீபொய்கைபுக்கு *
நஞ்சுமிழ்நாகத்தினோடுபிணங்கவும் நான்உயிர்வாழ்ந்திருந்தேன் *
என்செய்யஎன்னைவயிறுமறுக்கினாய் ஏதுமோரச்சமில்லை *
கஞ்சன்மனத்துக்குஉகப்பனவேசெய்தாய் காயாம்பூவண்ணம்கொண்டாய். (6)

பன்றியும்ஆமையும்மீனமுமாகிய பாற்கடல்வண்ணா! உன்மேல் *
கன்றினுருவாகிமேய்புலத்தேவந்த கள்ளஅகரர்தம்மை *

சென்றுபிடித்துச்சிறுக்கைகளாலே விளங்காயெறிந்தாய்போலும் *
என்றும்என்பிள்ளைக்குத்தீமைகள்செய்வார்கள் அங்ஙனமாவர்களே. (7)

கேட்டறியாதனகேட்கின்றேன் கேசவா!கோவலர்இந்திரற்கு *
காட்டியசோறும்கறியும்தயிரும் கலந்துடன்உண்டாய்போலும் *
ஊட்டமுதலிலேன்உந்தன்னைக்கொண்டு ஒருபோதும்எனக்கரிது *
வாட்டமிலாப்புகழ்வாசுதேவா! உன்னைஅஞ்சுவன்இன்றுதொட்டும். (8)

திண்ணார்வெண்சங்குடையாய்! திருநாள்திருவோணமின்றேழுநாள் * முன்
பண்ணேர்பொழியாரைக்கூவிமுளையட்டிப் பல்லாண்டுகூறுவித்தேன் *
கண்ணாலம்செய்யக் கறியும்கலத்ததரிசியும்ஆக்கிவைத்தேன் *
கண்ணா! நீநாளைத்தொட்டுக்கன்றின்பின்போகேல் கோலம்செய்துஇங்கேயிரு (9)

* புற்றரவல்குல் அசோதைநல்லாய்ச்சி தன்புத்திரன்கோவிந்தனை*
கற்றினம்மேய்த்துவரக்கண்டுகந்து அவள்கற்பித்தமாற்றமொல்லாம் *
செற்றமிலாதவர்வாழ்தரு தென்புதுவைவிட்டுசித்தன்சொல் *
கற்றிவைபாடவல்லார் கடல்வண்ணன்கழலிணைகாண்பர்களே. (10)

அடிவரவு : சீலை கன்னி காடு கடி பற்றார் அஞ்சுடர் பன்றி கேட்டு திண்ணார் புற்று தழை.

! மேல்தோன்றி-செங்காந்தன். # முத்தம்-அதரம்